17. (அ) கண்ணதாசனின் கற்பனைத் திறனை 'தைப்பாவை' நூல் கொண்டு மதிப்பிடுக.

(அல்லது)

(ஆ) 'ஊருலகங் காண உதவாயோ தைப்பாவாய்' என்று கண்ணதாசன் வேண்டுவதை விளக்குக.

18. (அ) இன்குலாப் கவிதைகளின் வழியே புலனாகும் அவரது தார்மீகக் கோபத்தினைச் சான்றுகளுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) இன்குலாப் கவிதைகளில் புலப்படும் நம்பிக்கைவாதப் போக்கினை மதிப்பிடுக.

19. (அ) காதலினால் சாதியை வெல்ல முடியும் என்று காட்டிய அமிர்தத்தின் செயல்கள் 'வேலைக்காரி' நாடகத்தின் மையமாக அமைவதை ஆய்க.

(அல்லது)

(ஆ) வேலைக்காரி நாடகக் கட்டமைப்பை விளக்குக.

20. (அ) மு. இராமசாமியின் 'சாபம் விமோசனம்' நாடகத்தில் புலப்படும் விமர்சன நோக்கத்தை ஆய்க.

(அல்லது)

(ஆ) 'சாபம் விமோசனம்' நாடகத்தின் நவீன நாடகப்பண்புகளை விளக்குக.

---



Reg. No. : ..............................

**Code No. : 7029** **Sub. Code : C 12 T**

M.A. (CBCS) DEGREE EXAMINATION,
NOVEMBER 2011.

First Semester

Tamil

இக்கால இலக்கியம் — கவிதையும், நாடகமும்

(For those who joined in July 2008 onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 1 = 10$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

1. 'கண்கள் புரிந்து விட்ட பாவம்' எதுவென்று கண்ணனைக் காதலித்த தலைவி கூறுகிறாள்?

2. அரசகுமாரிக்குக் கவிதை கற்பிக்குமாறு மன்னன் கூறியதற்கு உதாரன் கூறிய மறுமொழி என்ன?

3. 'எதிரெதிர் உலகங்கள்' என்று ஞானக்கூத்தன் எவற்றைக் குறிப்பிடுகிறார்?

4. நட்புக்கான கவிதை எப்போது தொடங்கியதாக அறிவுமதி குறிப்பிடுகிறார்?

5. தன் கவிதைகள், குழந்தை போல வழிதவறிப் போய்விட்டது என்று தமிழச்சி ஏன் குறிப்பிடுகின்றார்?

6. 'புதிதாக எதையும் எழுதவில்லை' என்று இன்குலாப் கூறுவதன் பொருள் என்ன?

7. பதினாறுகால் மண்டபத்தை இடிக்கக் கூடாது என்று தடுத்தவர் யார்?

8. 'நந்தனார்' என்ற பெயரை இந்திரா பார்த்தசாரதி 'நந்தன்' என்று குறிப்பிடக் காரணம் என்ன?

9. சொல்லை உணர்வுடையதாக ஆக்குவது எது?

10. 'நாலு வேலி நிலம்' நாடகத்தை எழுதியவர் யார்?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

11. (அ) தேவாங்கு எதிர்காலத்தில் என்னவாக ஆகும் என்று ந. பிச்சமூர்த்தி கருதுகிறார்?

(அல்லது)

(ஆ) தேவாங்கு ஏன் டைனோசராகவில்லை? விளக்குக.

12. (அ) 'காலை மணியோசை' முதலான பல்வேறு ஓசைகளின் இனிமையைக் கண்ணதாசன் எங்ஙனம் விளக்குகிறார்?

(அல்லது)

(ஆ) 'முத்தை விளைத்தாள் முகத்தில் அதை மறைத்தாள் எப்போது அதை எடுத்துத்தருவாள்' என்று கண்ணதாசன் கூறுகிறார்?



13. (அ) மனம் எவ்வாறு அஜீரணம் கொண்டிருப்பதாகத் தமிழச்சி கூறுகிறார்?

(அல்லது)

(ஆ) 'பூனை இரவு' கவிதையின் அடிக்கருத்தினைச் சுட்டுக.

14. (அ) தன்னைப் பெண்பார்க்க வந்த வயோதிக மாப்பிள்ளையை அமிர்தம் எவ்வாறு சமாளித்துத் திருப்பி அனுப்புகிறாள்?

(அல்லது)

(ஆ) மணி தான் வாங்கிய கடனை, வாங்கவில்லை என்று எங்ஙனம் பொய்ச்சத்தியம் கூறுகிறான்? விளக்குக.

15. (அ) 'பன்னிரண்டு ஆண்டுகள் தவம் செய்த பின்னர் சங்க முனி என்னென்ன நன்மைகள் செய்வார்' என்று சீடர்கள் எதிர்பார்த்தனர்?

(அல்லது)

(ஆ) 'பெண்ணே இன்பம், அவள் கண்ணே பேரின்பம்' என்று சங்க முனி கூறக் காரணம் என்ன?

பகுதி இ — ($5 \times 8 = 40$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

16. (அ) 'பெண்ணென்று பூமி தனிற் பிறந்து விட்டால் - மிகப்பீழை யிருக்குதடி தங்கமே தங்கம்' - என்று தலைவி கூறக் காரணம் யாது?

(அல்லது)

(ஆ) 'தாயினைக் கண்டாலும் -ஸகியே, சலிப்பு வந்ததடி என்று தலைவி கூறக் காரணம் என்ன'?